செய்தி வெளியீடு நாள் : 05.06.2026

**மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.ப. ராஜ்குமார் அவர்கள் தலைமையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த விரிவான ஆய்வுக் கூட்டம் துறை சார்ந்த அலுவலர்களுடன் நடைபெற்றது.**

******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி** இன்று (05.06.2026) சென்னை, எழும்பூர், தாளமுத்து-நடராசன் மாளிகையில் உள்ள சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் **திரு.ப. ராஜ்குமார் அவர்கள்** தலைமையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த விரிவான ஆய்வுக் கூட்டம் துறை சார்ந்த அலுவலர்களுடன் நடைபெற்றது.

**மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.ப. ராஜ்குமார் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** உத்தரவிற்கிணங்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதல் ஆய்வு கூட்டம் துறை அலுவலர்களுடன் விரிவாக நடைபெற்றது. மக்களுக்கு என்ன தேவையோ, அந்த திட்டங்கள் தொடர்பாக அலுவலர்களுடன் ஆலோசனை செய்து, சிஎம்டிஏ சார்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் **முழுமைத் திட்டப் (Master Plan Unit) பிரிவின் கீழ் உள்ள** மூன்றாம் முழுமை திட்ட தயாரிப்பு பணிகள், நிலசேகரிப்பு வளர்ச்சித் திட்டம் – மாடம்பாக்கம் & திருமழிசை மற்றும் புது நகர் மேம்பாடு திட்டங்கள் (செங்கல்பட்டு, மீஞ்சூர், திருவள்ளூர், திருமழிசை & மாமல்லபுரம்). **பரப்பு திட்ட (Area Plans Unit) பிரிவின் கீழ் உள்ள** இணையவழி திட்ட அனுமதி – உயரம் குறைந்த கட்டடங்கள் (Non-High Rise Buildings) (<18.30m), உயரமான கட்டடங்கள் (High Rise Buildings) (>18.30m), மனைப்பிரிவு (Layout), நில உபயோக மாற்றம் (Reclassification) அனுமதி மற்றும் பணி நிறைவு சான்றிதழ் (Completion Certificate), **பரப்பு வளர்ச்சி (Area Development Unit) பிரிவின் கீழ் உள்ள** பல்வேறு சமுக உட்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் அவற்றின் செயல்பாட்டு நிலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பல்வேறு திட்டங்கள் (கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி (KWMC), இரும்பு & எக்கு அங்காடி, சாத்தான்காடு) மற்றும் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் விரிவாக ஆலோசனை செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.ஆர.ராகுல் நாத், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திருமதி. ச.ப.கார்த்திகா, இ.ஆ.ப., தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.ந.ரவிக்குமார், திரு.டி.சபாபதி, திரு.பெ.கஜேந்திரன், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ராஜன்பாபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™